DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.51/2022**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | காமராஜன் | Caste: | |
| Father's Name: | மாரியப்பன் | Calling: | கொத்தனர் |
| Village: | கணபதியேந்தல் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 35 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 30.09.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா கணபதியேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் பாண்டி, சுரேஷ்குமார், கணேசன்,மாரிமுத்து ஆகியோர்களை தெரியும். நான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர்கள். கடந்த 21.07.2022ம் தேதி இரவு 12-12.30 மணியளவில் என் மச்சான் கணேசன் இராமநாதபுரத்தில் சந்தை வியாபாரத்தை முடித்துவிட்டு வருவதாகவும், அவரை அழைத்து செல்ல வரும்படியும் கேட்டுக்கொண்டதால் கீழப்பெருங்கரை பஸ்ஸ்டாப்பில் பைக்குடன் நின்று கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த பாண்டி, சுரேஷ் அங்கிருந்தார்கள். நான் சென்ற பைக்கின் எண் TN 65 AV 9036 Passion Pro Black Colour வண்டி. அப்போது எதிரிகள் மூவரும் அங்கு வந்து எந்துார்டா என்று என்னிடம் கேட்டபோது நான் கணபதியேந்தல் என்று

சொன்னேன். அவர்கள் பள்ளப்பயலுக்கு இங்க என்னடா வேலை என்று பேசி தனபாண்டி என் செல்போனை பிடுங்கி கீழே விட்டெறிந்தார். என்னுடைய செல்போன் மோட்டோ . சில்வர் நிறம். என் பைக்கின் நம்பர் பிளேட்டையும் பிச்சு கீழே எறிந்துவிட்டு வண்டியை கீழே தள்ளிவிட்டார். 1ம் எதிரி தனபாண்டி தனது வண்டியில் இருந்த இரும்பு கம்பியை எடுத்து என் வலது தோள்பட்டையிலும் இடது கன்னத்திலும் கம்பியால் அடித்துவிட்டார். எங்க ஊரைச் சேர்ந்த பாண்டியும், முனியாண்டியும் விலக்கிவிடவும் எதிரிகள் எங்களிடம் வைத்துக்கொண்டால் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். நான் ஊருக்குள் சென்று பெரியோர்களிடம் சொல்லிவிட்டு பரமக்குடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை செய்துவிட்டு பார்த்திபனூர் காவல்நிலையம் சென்று என்னை சாதியை சொல்லி திட்டி அடித்து செல்போனை உடைத்து பைக்கை சேதப்படுத்திய எதிரிகள் மீது புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்த புகார் மனுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1**. 1ம் எதிரி என்னை அடிக்க பயன்படுத்திய கம்பி நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான். அந்த கம்பி **அ.சா.பொ.1**. என்னிடம் காட்டப்படும் செல்போன் என்னுடைய செல்போன்தான். அது **அ.சா.பொ.2**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடையதுதான். அது தற்போது பார்த்திபனூர் காவல்நிலையத்தில் உள்ளது. அந்த புகைப்படங்கள் (6 எண்ணம்) குறுந்தகடுடன் கூடியது. அந்த புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு **அ.சா.ஆ.2.** இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

**இல்லை**

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)